# மஹாஓயா பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 நவெம்பர் 21 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஜூன் 02 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 பெப்ரவரி 21 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மஹாஓயா பிரதேச சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மஹாஓயா பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2011 ஆம் ஆண்டிற்கான வருமான, செலவினக் கணக்கைத் தயாரிக்கையில் வருமானமும் செலவினமும் முறையே ரூபா 222,265, ரூபா 37,327 என குறைத்துக் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருவாயாகிய ரூபா 62,950 ஆண்டிற்கான வருவாயாகக் கணக்கில் காட்டப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 206,666 ஆகும். எனினும், நிதிசார் கூற்றுக்களில் ரூபா 156,395 சேர்த்துக்கொள்ளப்பட்டமையால் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 50,271 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

**(அ) பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

2013 ஏப்ரல் 11 ஆந் திகதியளவில் 03 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் வழங்கப்படாதிருந்தன. அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 847,492 ஆகும்.

**(ஆ) தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 7,617,230 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**2. நிதி, மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 350,477 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 66,737 ஆகும்.

**2.2 வருவாய் நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன**

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையும் வரியும் | 10,000 | 4,500 | - |
| (ii) | குத்தகை வாடகை | 2,445,100 | 2,147,904 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 287,000 | 293,670 | - |
| (iv) | சேவைக் கட்டணம் | 1,250,000 | 1,422,791 | - |
| (v) | பிடிஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 153,000 | 156,396 | - |
| (vi) | பிற வருவாய் | 39,000 | 235,616 | 727,919 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளாரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தொகை கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 161,583 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 62,950 |

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்